24 இல்ல சுண்டுக்குளி கிளை நூலகம்

விலை ரூபா 3-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 புரட்டாதி: 24 ற:அவ்வல் பிறை: 20 இதழ்: 168
யாழ்ப்பாணம் புதன்கிழமை 10-10-1990

## வவுனியா செல்வதற்கு 'பாஸ்' தேவை இல்லை
### நாளை முதல் புதியமுறை அமுல்

(யாழ்ப்பாணம்)
விடுதலைப், புலிகள் மக்கள் முன்னணி, வெளி இடங்களுக்குச் செல்லும் பொது மக்களுக்கு புதிய 'பாஸ்' முறையை நாளைமுதல் அமுலுக்கு கொண்டுவந்துள்ளது. இதன் பிரகாரம் இனிமேல் முத்திரைச்சந்தைக்கு 'பாஸ்' பெற செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது. புதிய முறைப்படி

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரப்பகுதியில் ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரை அண்டியபகுதியில் நேற்று ஹெலி கொப்டரிலிருந்து 50 ஹலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுப்பிற்பகல் 2-30மணியளவில் நகரப்பகுதியை சுற்றி வட்டமிட்ட ஹெலிகொப்டர் பலதடவைகள் பொதுமக்கள் இருப்பிடங்களைநோக்கிபலத்த தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலினால் நகர்ப் பகுதியில் நின்ற மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடிய வண்ணமிருந்தனர்.

# சாவகச்சேரி சந்தையில் ஹெலி தாக்குதல்; இரு சிறுவர் இருபெண் உட்பட 8 பேர் பலி!

## பதினேழு பேர் படுகாயம்

[நாவற்குழி]

**சாவகச்சேரி சந்தையில் நேற்று நண்பகல் நடந்த பயங்கர ஹெலித்தாக்குதலில் இரு சிறுவர்கள், இரு பெண்கள் உட்பட எட்டுப்பேர் பலியானார்கள். பதினேழுபேர் காயமடைந்தனர்.**

ற்று நண்பகல் 12.30 ளவில் பலாலியிலிருந்து ஹெலிகொப்ரர் ஒன்று சரி சந்தைமீது ஷெல் லையும் துப்பாக்கி வெட்டுக்களையும் சரமாரியாகத் தீர்த்தது.

இதனால் இரண்டு சிறுவர்கள் இரண்டு பெண்கள் உட்பட எட்டுப்பேர் பலியானார்கள். பதினேழுபேர் காயமடைந்தார்கள். இத்தாக்குதலினால் சந்தையில் கூடியிருந்த பெருந்தொகையான மக்கள் சிதறி ஓடினார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வங்கிக் கிளைகள் நேற்று இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி, மக்கள் நவீனசந்தை வங்கிக் கிளைகள் நேற்று இயங்கவில்லை, பெருந்திரளான மக்கள் பணத்தை மீளப்பெறுவதற்கு கியூ வரிசையில் நின்றபோதும் அவர்களுக்கு வங்கி அலுவல்கள் இன்றுமுதல் நடைபெறும் என்பதை தெரிவிக்காமல் அதிகாரிகள் நடந்துகொண்டனர்.

வங்கியின் முன்புறத்தில் எந்த வங்கிகள் இன்று முதல் தனது பணிகளை நடாத்தும் என்பதைத் தெரிவிக்காமல் அறிவித்தல் போடப்பட்டிருந்தது. பாதுகாப்பு அதிகாரிகள்,

(4-ம் பக்கம் பார்க்க)

## பொம்மர் தாக்குதல் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் பிற்பகல் 4-00 மணியளவில் 2 பொம்மர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வி)

## திருமலையில் புலிகள் தாக்குதல் 2ஊர்காவல் படையினர் பலி!
### பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)
திருமலை ஹொறவப்பொத்தானைக்கும் சாந்திபுரத்துக்குமிடையில் விடுதலைப் புலிகள் ஊர்காவற்படையினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் இரு ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலில் ஊர்காவற் படையினரிடமிருந்து பெருந்தொகையான ஆயுதங்களும் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன. [வி]

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

## யாழ். போதனா வைத்தியசாலையை இயங்கச் செய்வதற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)
யாழ். போதனா வைத்தியசாலையை இயங்க வைப்பதற்கான முயற்சிகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுவருவதாக கொழும்பிலிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் குழுவும் செஞ்சிலுவை சங்க அதிகாரிகளும் கொழும்பிலுள்ள அரசாங்க அதிகாரிகளுடன் இதுதொடர்பான [illegible] வார்த்தையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையில் யாழ். போதனா வைத்தியசாலையில் திருத்த வேலைகள் இடம்பெற்றுவருகிறது.

கொழும்பிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துப் [illegible] விரைவில் அனுப்பி வைக்க[illegible] தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### விலை அதிகரிப்பு

'ஈழநாடு' தினசரியின் விலை இன்று முதல் 50 சதத்தால் அதிகரிக்கப் படுகின்றது.

தற்போதைய சூழ்நிலை காரணமாக இவ்விலை ஏற்றத்தைச் செய்துள்ளோம் என்பதை வாசக நேயர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்

நெருக்கடி நிலை காரணமாக 6-8-90ல் நிறுத்தப்பட்ட 'ஈழநாடு' இன்று முதல் தொடர்ச்சியாக வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

நிர்வாகி.

தீவுப்பகுதி கடலில்

## கடற்படையினரால் மக்கள் துன்புறுத்தல்!

(புங்குடுதீவு)
நயினாதீவிற்கும் புங்குடுதீவிற்கும் இடையிலுள்ளகடற்பகுதியில் ரோந்து செய்துவரும் கடற்படைக்கு சொந்தமான 'வீரசூரியா' கப்பலில் பணிபுரியும் கடற்படையினரால் பொதுமக்கள் துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள்.

[illegible] நெடுந்தீவு உட்பட தீவுப்பகுதிகளுக்கு கடற்பிரயாணங்களைமேற்கொண்டு வரும் பொதுமக்களை வழிமறித்து கடற்பகுதியில்நீண்ட தூரம் அழைத்துச் சென்று துன்புறுத்துவதுடன் பொதுமக்கள் செல்லும் படகுகள் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இக்கடற்பகுதியில் மக்கள் அ[illegible] செய்வதற்கு

## ஊர்காவற்றுறையில் தமது நிலைகளைப் பலப்படுத்தும் முயற்சியில் இராணுவம்! புலிகள் எதிர்த்தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறை கரம்பன் பகுதியில் இராணுவத்தினர் தமது நிலைகளைப் பலப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

தற்காலிக முகாம்களைப் பலப்படுத்த வசதியாக முள்ளுக்கம்பிகள், கட்டைகள் காரைநகர் முகாம்களில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளன.

இதேவேளையில் சரவணைச் சந்தி, செங்குந்தான் சந்திகளுக்கு அப்பால் இராணுவத்தினர் இராணுவ வாகனங்களுடன் காட்சியளிப்பதாக அப்பகுதியில் இருந்து வந்த மக்கள் கூறுகிறார்கள்.

கரம்பொன்கிழக்கு, கரம்பொன் மேற்கு அயித்தாம் புலம் ஊர்காவற்றுறை, கொக்கிளாமண்டை, நாரந்

(4ம் பக்கம் பார்க்க)

## 104 மிதி வெடிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)
ஊர்காவற்றுறை, தம்பாட்டிப் பகுதியில் இராணுவத்தால் புதைத்து வைக்கப்பட்டிருந்த 104 மிதிவெடிகளை விடுதலைப் புலிகள் மீட்டுள்ளனர். (வி)

★ சோதிட ரீதியில் இனப்பிரச்சனை—

# சனி, செவ்வாய், வியாழன் வக்கிரம் நல்ல நிலைமைகளைத் தோற்றுவிக்கும்!!

செவ்வாய் கிரகம் ஒருராசியில் நாற்பத்தைந்து நாட்கள் சஞ்சாரம் செய்யும் நிலைமாறி ஆகஸ்ட் மாதம் பத்தொன்பதாம் திகதிமுதல் இருநாற்றிப் பதினைந்து நாட்களுக்கு இடபராசியில் சஞ்சாரம் செய்கின்றது. இது உலகநாடுகளில் மட்டுமல்ல இலங்கையிலும் கூட விபரீதமான பலன்களை அளிக்கப்போகிறது. அதுவும் ஒவ்வொரு கிரகமும் வக்கிரகதியில் இருக்கும்போது அதிக பலனை வழங்குமென்பது ஜோதிடவிதி.

செவ்வாய் அக்டோபர் மாதம் இருபத்திரெண்டாம் திகதி இடபராசியில் வக்கிரம் அடைகின்றது. குருபகவான் நவம்பர்மாதம் 30ந் திகதி வக்கிரம் அடைகிறது. சனி பகவான் டிசம்பர் மாதம் பதினாலாம் திகதிவரை வக்கிரத்திலுள்ளது. மூன்று கிரகங்கள் அதுவும் வலிமையடைவது, இலங்கைத் தமிழர் பிரச்சனையில் புதிய உத்வேகத்தையும், புதிய திருப்புமுனைகளையும் தருமென்பதில் ஐயமில்லை.

## ஜோஸ்யர்

செவ்வாய் பூமிக்கு அருகில் வருவது நவம்பர்மாதம் இருபதாம் திகதியாகும். இக்காலப் பகுதியில் உலக நாடுகளில் இயற்றையழிவுகள், மனித உயிர்களுக்கு இழப்பு இராணுவப்புரட்சிகள், உருவாகுமென மேலைநாட்டு ஜோஸ்யர்கள் இவ்வாண்டுக்கான கிரகசஞ்சாரங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

ஆயிரத்திதொளாயிரத்தி எண்பத்தேழாம் ஆண்டு தனுராசியிய் செவ்வாய் நூற்றி எண்பத்தாறு நாட்கள் சஞ்சரித்தபோது, இலங்கை இந்திய ஒப்பந்தம் அதனால் வதன் பகுதியில் அரசியல் கொந்தளிப்பு ராஜீவ்காந்தியின் உயிருக்கு ஆபத்து, என்பன நிகழ்ந்துள்ளன. இலங்கைக்குள் அந்நியப்படை ஊடுருவியதும் இக்காலத்தில் தான் அதனால் ஏற்பட்ட அனத்தங்கள் எண்ணிலடங்கா.

செவ்வாய் இடபராசியில் சஞ்சரிக்கும்போது இந்தியாவின் சுதந்திர ஜாதகத்திற்கு ஐந்தில் செவ்வாயும் புதிய வி. பி. சிங் அரசாங்கம் பதவியேற்ற அரசுக்கான ஜாதகத்திற்கு ஜென்மத்திலும் சஞ்சாரம் செய்கிறார். இதனால் இந்தியா பிரச்சனைக்கு முகம் கொடுக்கமுடியாமல் மாட்டிக் கொள்ளவும் வாய்ப்புக்கள் தென்படுகின்றன.

இதனைவிட சனியும் ராகுவும் நேர்கோட்டில் நாலுபாகையில் மகரராசியில் அடுத்தாண்டு ஜனவரி மாதம் இருபத்தோராம் திகதி சஞ்சரிக்கும் இதுபதினொரு ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஏற்படுகிறது இம்மாற்றம் உலகமக்களுக்கு கஷ்டங்களை கொடுத்தாலும் முடிவில் நல்ல முடிவுகளைத்தரும். தமிழர்வாழ்விலும் திருப்பமுண்டு.

## வெரித்தாஸில் புலிகள் பாடல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் புரட்சிப்பாடல்களை ''வெரித்தாஸ்'' வானொலி நேயர் விருப்ப நிகழ்ச்சிகளில் தற்போது ஒலிபரப்பி வருவதை கேட்கக் கூடியதாக உள்ளது. இப்பாடல்களை பெரும்பாலும் தென் இலங்கையில் உள்ள தமிழ் நேயர்களும் தமிழக நேயர்களும் கேட்பதாகமேற்படி வானொலி தெரிவித்தது. (வி)

## போராளிகள் நினைவாக தொழிற்சாலை

(நாவற்குழி)

குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு போராளிகள் 3-வது ஆண்டு நினைவாக தென்மராட்சி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் தும்புத் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலையின் மூலம் இங்கு அகதிகளாக உள்ள பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. (107)

## இராசி பலன்

**10 - 10 - 1990**
**புதன்கிழமை**

ஸப்தமி பி. இ. 2-44 வரை, மிருகசீரிடம் மு.ப. 8. 57 வரை, சித்தயோகம், இராகுகாலம் 12-03 முதல் 1-03 வரை, நல்ல நேரம் மாலை 4-32 முதல் 6-02வரை.

மேடம்: அறிஞர் பாராட்டு, பணவரவு, தயாள சிந்தை, குடும்ப மகிழ்ச்சி, மனநிறைவு.

இடபம்: மனவேதனை, அதிக செலவு, வைத்தியம், குடும்ப உறவு, யோசனை.

மிதுனம்: போட்டிகளில் வெற்றி, நல்லோர் சினேகம், சகோதரர் உதவி, பாராட்டு.

கடகம்; எதிர்பாராத செலவு, குடும்ப வெறுப்பு, பழைய உறவு, ஆலய தரிசனம், சோம்பல்.

சிங்கம்: தாய்வழி உறவு, புதிய முதலீடு, வயிற்றில் ரோகம், பணவரவு, வெற்றி,

கன்னி: பயண அலைச்சல், தந்தையர் உதவி, வீட்டில் சுபகாரியம், விருந்துபசாரம்.

துலாம்: எதிர்பாராத தொல்லை, கருத்துமோதல், பிள்ளைகளால் பாராட்டு, கடன் படல்.

விருச்சிகம்: வைத்திய செலவு, தாய்மூலமான கவலை, குடும்ப மனஸ்தாபம், அகால போஜனம்.

தனுசு: அனுகூலமான செய்தி, தொழில் சிறபபு, குடும்ப மகிழ்ச்சி, அந்நியர் உதவி.

மகரம்: காரிய வெற்றி, நண்பர்கள் உதவி, புதிய சிந்தனை, பயணம், தர்மசிந்தனை.

கும்பம்; விரக்தியடைதல், பணக் கவலை, குடும்பத்தில் கருத்து வேற்றுமை, தனிமை.

மீனம்: நோய் தணியும், தாய் மூலமான கவலை, தொழில் போட்டி, பிரிந்தவர் கூடுவர்.

ஜோஸ்யர்.

ஜனசக்தி

## நிவாரணம் பெறுவோருக்கு புதிய கடன் திட்டம்

(கொழும்பு)

ஜனசக்தி நிவாரணம் பெறுபவர்களுக்கு தமது வாழ்க்கை வசதிகளை வளம்படுத்த மக்கள் வங்கி ஆயிரத்து ஐநூறு ரூபா முதல் ஐயாயிரம் ரூபா வரை கடன்பெறும்திட்டமொன்றை அறிவித்துள்ளது.

இத்திட்டத்தில் கடன்பெறுபவர்கள் மக்கள் வங்கியில் இருபத்தைந்துரூபாவைமாதா மாதம் சேமிப்பில் இடுவதன் மூலம் ''மக்கள் கடன்'' திட்டத்தில்கடனைப்பெறலாமென மக்கள் வங்கித் தலைவர் திரு. லக்ஸ்மன் வட்டவல செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். கடன் ஜனசக்தி பெறுபவர்கள் தமது பகுதியில் ஜனசக்தி பெறுபவர்களுக்கான சங்கங்களை அமைத்து அந்த அமைப்பின் பரிசீலனைக்கு அமைவாக கடன் வழங்கப் படவிருப்பதாக அறிவித்தார். இக்கடனை 2 வருடங்களில் திருப்பிசெலுத்தவேண்டும். (ச)

## போர்க்கால யாத்திரை

(நாவற்குழி)

தென்மராட்சி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் போர்க்கால நிகழ்வுகளை மக்களுக்கு விளக்கும் முகமாகவும் போர்க்காலத்தில் மக்களின் பங்களிப்பு பற்றி விளக்கம் கொடுப்பதற்காகவும் தென்மராட்சிப் பகுதியில் போர்க்கால பாதயாத்திரையொன்றை மேற்கொண்டுள்ளார்கள்.

## செயலகம் முன்பாக உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் யாழ். செயலகம் முன்பாக ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் நடாத்தவுள்ளது.

இம் மன்றம் ஏற்கனவே ஐக்கியநாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய யாழ். கிளை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், பருத்தித்துறை (மந்திகை) அரசினர் ஆஸ்பத்திரி ஆகியவற்றின் முன்பாக ஒருநாள் உண்ணாவிரதம் அனுஷ்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மேற்படி மன்றத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு கொழும்புத்துறை இந்து மாமன்றத்தின் மன்ற அமைப்பாளர் திரு. சி. கஜேந்திரநாத் தலைமையில் நடைபெறும். (54)

## நிவாரண விநியோகத்தில் பலத்த மோசடி

(யாழ்ப்பாணம்)

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்குகுல் சில கிளைக் கடைகளில் பங்கீட்டு நிவாரணப் பொருட்களில் மோசடிகள் இடம் பெறுவதாக பாவனையாளர்கள் அரசாங்க அதிபருக்கும் உதவி அரசாங்க அதிபருக்கும் முறையிட்டுள்ளனர்,

சில கிளைகளில் விநியோகிக்கப்படும் பொருட்களில் நிறை குறைவாக உள்ளதாகவும் தீப்பெட்டிக்குள் பத்துக் குச்சிகளே இருப்பதாகவும் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைகளுக்கும் கிளைக் குழுக்கள் இயங்குகின்றபோதிலும் இன்றைய சூழ்நிலையில் மக்கள் அல்லல் படும்போதும் பாராமுகமாக இருப்பதாகவும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (54)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விசேட ஆட்சிக் குழுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. (54)

## 'ஹெலி' தாக்குதல் பாடசாலை சேதம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கைதடிப் பகுதியில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் தாக்குதலினால் கைதடி கலைவாணி வித்தியாசாலையிலுள்ள மூன்று கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. ஓடுகள். சுவர்கள் உடைந்த நிலையில் காணப்படுவதுடன் கட்டடங்களின் உட்பகுதிகளில் குண்டுத் தாக்குதலினால் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன,

ஹலி தாக்குதலினால் [illegible] விபரம் குறித்து மதிப்பீடு எடுக்கப்பட்டுவருவதாகவும் இதுகுறித்து கல்வி அலுவலக உயரதிகாரிகளிடம் புகார் செய்யப்படும் என்றும் பாடசாலை அதிபர் திரு, ப. செல்லத்துரை தெரிவித்தார்.

## கூட்டுறவு அலுவகம் இன்றுமுதல் செயல்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இன்று புதன்கிழமை முதல் சகல அலுவல்களும் நடைபெறவிருக்கின்றன,

இவ்வலுவலகத்தில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களையும் இன்றுமுதல் கடமைக்கு சமுகம்தருமாறு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம் நடத்தும் கைதடியிலுள்ள தொழிலகத்தில் முதலாவது ஆண்டுவிழா நவீல்ட் பாடசாலை உப அதிபர் திரு. கே. கோபாலகிருஷ்ணன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவில் அறவழிப் போராட்டக்குழு நிர்வாக இயக்குநர் திரு. க. ஜீவகதாஸ் பிரதம விருந்தினராகவும் டாக்டர் சபாநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக் குழுவினரின் ஆதரவில் நடைபெறும் தென்மராட்சியிலுள்ள பாலர் பாடசாலைகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது,

இந்தப் பகுதியிலுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்கள் கூட்டம் அண்மையில் அறவழிப் பணிமனையில் நடைபெற்றது.

## துணைப்படைப் பயிற்சி

(நாவற்குழி)

கைதடிப்பகுதியில் உள்ள 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான துணைப்படைப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் 280பேர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றுவருகிறார்கள். இதில் 70 வயதிற்கும் மேற்பட்ட பல தாத்தாமார்களும் பயிற்சி பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

தென்மராட்சியில் நடைபெற்ற துணைப்படைப்பயிற்சியில் கைதடியிலேயே அதிகளவு பயிற்சியாளர்கள் பயிற்சி பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். (107)

குறைந்த விலையில் நிறைந்த சேவை!
சுவைமிக்க … க்களுக்கு
விஜயம்செய்யுங்கள்

ரெலிக்கா ஹோட்டல்

ரெலிக்கா ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்கள்
கைதடி - நுணுவில்
கண்டி வீதி, சாவகச்சேரி
உரிமையாளர்: A. B. M. அபூபக்கர்
(ஏ 823)

# யாழ். நகரின் இன்றைய நிலை

யாழ். நகரத்தின் அழகே அழிக்கப்பட்டு பூவிழந்து, பொட்டிழந்து விதவைக் கோலத்தில் நகர் இருப்பதனைப் பார்த்து பார்ப்போரெல்லாம் கண்ணீர் விட்டழுத வண்ணம் செல்வதனைத்தினமும் காணக் கூடியதாக இருக்கிறது.

தினமும் கலகலப்புடன் காட்சிதரும் எங்கள் நகரம் இன்று ஒரு மயான பூமியாக இருப்பதனை யாரால்தான் தாங்க முடியும்.

பஸ் நிலையப்பகுதியில் பஸ்களின் இரைச்சலுடன் பேப்பர் காரர்கள், டொபி விற்பவர்கள், பிச்சைக்காரர்கள்உட்பட விளம்பர சேவையில் ஒலிக்கும் இனிய கானங்கள் எல்லாம் நகரம் எப்பொழுதும் களைகட்டிக் கொண்டேயிருப்பதனைக் காட்டும்.

மக்கள் திரளினாலும், பஸ்களாலும் நிரம்பி வழியும் எங்கள் நகரத்தில் இன்று இடிந்து போன கட்டடங்களில் மண் குவியல் மட்டும் காணமுடிகிறது;

பல தேவைகளின் நிமித்தம் யாழ்ப்பாணம் வரும் அநேக மாணவர்கள் புத்தகசாலைகளுக்குச் சென்று பத்திரிகையோ, புத்தகங்களோ வாங்காமல் செல்லமாட்டார்கள். இன்று யாழ். வரும் மக்கள் தாங்கள் அனுபவித்தவற்றை நினைத்துத்தான் பார்க்கலாம் ஆனால் அனுபவிக்க முடியாது.

போராளிகளோடு நேர் நின்று மோதமுடியாத சிறிலங்காப் படைகளின் கோழைத்தனமான, நடவடிக்கைகளினால் எங்கள்நகரமே அழிக்கப்பட்டுள்ளதனை பார்க்கின்ற பொழுது அரசாங்கத்தின் நோக்கயே அப்படியே தெரிகின்றது.

## தரைமட்டம்

காங்கேசன்துறை வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, முட்டாசுக்கடைச்சந்தி, மகாத்மாகாந்திவீதி, சத்திரத்துச் சந்தி உட்பட நகரைச் சூழ்ந்துள்ள இடங்களிலுள்ள நூற்றுக்கணக்கான கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டு அத்திவாரத்துடன் காணப்படுகிறது.

**வனிதன்**

இங்குள்ள ஒவ்வொரு கட்டடங்களின் மீது நான்கு அல்லது ஐந்து தடவைகள் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

நவீன சந்தைக் கட்டடங்களிலும் பல இடிந்து வீழ்ந்துள்ளதுடன் பஸ் நிலையம், அத்துடன் புத்தகசாலைகளோடு இணைந்த கடைகள், ஆஸ்பத்திரிக்கு முன்னுலுள்ள மருந்துக்கடைகள், நகரிலுள்ள ஐந்து படமாளிகைகள் முற்றுகச் சேதமடைந்துள்ளன.

## கோட்டையில் புலிக்கொடி

சத்திரத்துச் சந்தியிலிருந்து கோட்டையைப் பார்க்கின்ற பொழுது அங்கே புலிக்கொடி கம்பீரத்துடன் பறப்பதனைக் காணமுடிகிறது.

''கோட்டையிலே நமது கொடி பறந்திட வேண்டும். கொள்கை வீரர் தியாகங்கள் காட்டிட வேண்டும்'' என்ற சினிமாப்பாடல் வரிகளை விடுதலைப் புலிகள் நனவாக்கிவிட்டதனை இந்த நிகழ்வு ஏற்படுத்தியுள்ளது.

## புலிகளின் சென்றி

அவ்ரோ, பொம்மர், ஹெலிகொப்டர், சகடைஎன எத்தனையோ விதம் விதமான விமானங்களின் மூலம் அரசாங்கம் தனது பலம் முழுவதையும் திரட்டி நடத்திய விமானத் தாக்குதலினாலும் கோட்டையிலிருந்த புலிகளின் சென்றியை முறியடிக்க முடியாமல் போய்விட்டதென்றால் அதற்குக் காரணம் புலிகளின் தளராத மனவுறுதியும், விடாப்பிடியான கொள்கையும், இலட்சியப் பற்றும்தான்.

யுத்த காலங்களின் போது ஆஸ்பத்திரி மீது யாரும் தாக்குதல் நடத்துவதில்லை. ஆனால் சர்வதேச போர்முறைகளுக்கு மாறாக யாழ். போதனா வைத்திய சாலை மீது எத்தனை தடவைகள் தாக்குதல்கள் நடத்தப்பட்டது.

## வானத் தாக்குதல்

கடந்தகாலத்தில் யாழ். கோட்டையிலிருந்து இராணுவத்தினரால் ஏவப்பட்ட எத்தனையோ ஷெல்கள் ஆஸ்பத்திரியை தாக்கியுள்ளதுடன் அங்கு சிகிச்சைபெற்று வந்த நோயாளர்களையும் பலியெடுத்தது, இம்முறையும் அந்த ஆஸ்பத்திரிக் கட்டடங்கள் யாவும் அரச படைகளின் வானத் தாக்குதலினால் பெரும் சேதமடைந்துள்ளது.

## நிம்மதி

எத்தனையோ சேதங்களை எமது மக்களுக்கு ஏற்படுத்திய கோட்டை முகாம் இப்பொழுது தமிழ் மக்கள் கையில் இருக்கிறது. அதனால் நிம்மதிப் பெருமூச்சுடன் நகர்ப்புறத்தில் உலாவர முடிகிறது.

கடந்த மூன்றுமாத காலத்தில் நகர்மீது நடாத்தப்பட்ட மும்முனைத் தாக்குதலினால் சேதமடைந்த கட்டடங்களின் பெறுமதி கோடிக் கணக்கையும் தாண்டும்போல் தெரிகிறது. இதுசம்பந்தமான மதிப்பீடு இன்னும் செய்து முடிக்கப்படவில்லை.

வழமையான அலுவல்கள் எதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை; கட்டடங்கள் இருந்தால் தானே அவை நடைபெறும். இருந்தும் வங்கிகள் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

இந்த இடிபாடுகளையும் அழிவுகளையும் பார்க்கும் எல்லோரும் நிரந்தரத் தீர்வு ஏற்பட்ட பின்னர்தான் யாழ். நகரை பழைய நிலையில் காண முடியும் என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டு செல்கிறார்கள்.

# ஆசியா விளையாட்டில் சீனு சாதனை

(பீகிங்)

சீனுவின் தலைநகர் பீகிங்கில் நடைபெற்ற 11வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், சீனு 283 பதக்கங்களைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

16 நாட்கள் நடைபெற்ற இப்போட்டிகள், கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்தன. இறுதி நாள் நிகழ்ச்சியில், 70 ஆயிரம் பொதுமக்களும், 10 ஆயிரம் விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், விளையாட்டு உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில், சீனு 123 தங்கப் பதக்கங்களையும், 107 வெள்ளிப் பதக்கங்களையும், 51 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று முதலாவது இடத்தையும், தென் கொரியா 2வது இடத்தையும், ஜப்பான் 3வது இடத்தையும் பெற்றன.

மேற்படி போட்டியில், இந்தியா 1 தங்கம், 8 வெள்ளி, 14 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று 11வது இடத்தைப் பெற்றது. கடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில், ஓட்டப் பந்தயங்களில் 5 தங்கப் பதக்கங்களைப் பெற்ற இந்தியா இம்முறை ஒரு தங்கப் பதக்கத்தையும் பெருதது குறிப்பிடத்தக்கது. (வி)

# முல்லைத்தீவு செய்திகள்

## மீனவர்கள் கைது

(மாங்குளம்)

முல்லைத்தீவுக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளையில் அவ்விடம் வந்த கடற்படையினர் இவர்களது வள்ளம் வலைகளுடன் மீனவரையும் அழைத்துச் சென்றுள்ளனர்.

## 300 மெட்றிக் தொன் மா

முல்லைத்தீவிற்கு சிகிரியா கப்பலில் 300 மெட்றிக் தொன் மா வந்து சேர்ந்துள்ளது.

இம்மாவட்டத்துக்கான அரிசி, சீனி, பருப்பு மற்றும் உணவுப் பொருட்கள் பருத்தித்துறையிலிருந்து திரும்பும் விங்கோ ரேடர் கப்பலில் வந்து சேரவுள்ளது.

## கடமைக்குத் திரும்பும் ஆசிரியர்கள்

முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்கள் தமது கடமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் வரவு ஓரளவு கணிசமாகக் காணப்படுகிறது.

சகல திணைக்களங்களும் புதுக்குடியிருப்பில் இயங்கி வருகின்றது. ஒட்டுசுட்டான் துணுக்காய் பகுதிகளிலும் அரச அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

## அரச அதிபர் திரும்பினார்

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் அரச அதிகாரிகளுடன் கொழும்பிலிருந்து முல்லைத்தீவுக்குத் திரும்பியுள்ளார்.

இவர் கொழும்பில் உயர் அதிகாரிகளிடம் இராணுவ நடவடிக்கையால் முல்லைத்தீவில் ஏற்பட்ட சேத விபரங்கள், அகதிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள், விவசாயிகளின் பிரச்சனைகள் பற்றி எடுத்துரைப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவருடன் உதவி அரசாங்க அதிபர் வி. கந்தசாமி ஏ. இராசரத்தினம், திட்டமிடல் பணிப்பாளர் திரு. தர்மகுலசிங்கம் ஆகியோர் சென்றுவந்துள்ளனர். (150)

# "வசை பாடவில்லை இசை பாடுகிறோம்"

(லண்டன்)

மத்திய கிழக்கு நாடுகளில் முகாமிட்டிருக்கும் அமெரிக்கப் படைகளை மகிழ்விப்பதற்காக அமெரிக்க காட்சி வானொலிகளில் எல்லா நேரமும் 'ஈராக்' ஜனாதிபதியைக் கிண்டல்செய்யும் 'பொப்' இசைப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டுவருகின்றன. பாடல்கள் விடுகதைகளாக, நகைச்சுவை ஊட்டுவனவாக, கிண்டல்களாகத் தினசரி இயற்றப்பட்டு ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. பாடல்களில் அர்த்தங்கள் அதிகம்.

இது குறித்துப் பிரபல பொப் இசைப் பாடகர் மொறிஸ் ஜாக்சன் கருத்து வெளியிடுகையில், ''நாங்கள் ஈராக் ஜனாதிபதியை வசை பாடவில்லை; எமது வீரர்களை மகிழ்விக்க இசைபாடுகிறோம்,'' என்று பதிலளித்தார்.

பாடல் ஒன்றில் ஒருவர் கேட்பதைப் போல ''நாட்டின் ஜனாதிபதி நல்லவர், வல்லவர், கடும் விவேகி, மண்ணைப் பிடித்தவர், அவர் யார் எனக் கேட்க பெண்குரல் 'சதாம் ஹுசெய்ன்' எனப் பாடல் தொடரும். (ச)

# வடபகுதி நோக்கி இரு உணவுக்கப்பல்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறையை நோக்கி இரண்டு கப்பல்கள் வருவதாக கொழும்பிலிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன.

''லங்காஸ்ரீ'' என்னும் கப்பல் மூவாயிரம் மெற்றிக் தொன் உணவுப்பொருட்களுடன் இன்னும் இரு தினங்களில் பருத்தித்துறைச்கு வரவிருக்கின்றது.

''மேற்குமண'' என்னும் வெளிநாட்டுக் கப்பல் ஒன்று வாடகைக்கு அமர்த்தப்பட்டு இதில் ஐயாயிரம் மெற்றிக் தொன் உணவுப்பொருட்கள் திருமலை துறைமுகத்தில் வைத்து ஏற்றப்படுவதாகவும். இக்கப்பல் இவ்வார இறுதியில் பருத்தித்துறையை வந்தடையக்கூடும் என மேற்படி செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

# கையெழுத்து மகஜர் மக்களுக்குப் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் நிலையை விளக்கியும், தமிழ் அகதிகளின் பாதுகாப்புக் கோரியும் ஐ. நா. சபைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள ஐந்து லட்சம் தமிழ் மக்களின் கையெழுத்து மகஜர் சம்பந்தமாகப் பொதுமக்களுக்குப் பிரசாரம் செய்வதென்று தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மன்ற அமைப்பாளர் திரு. சி. கஜேந்திரநாத், திரு. வீ, கே. சபாரத்தினம், திரு. வே. கெ. தனபாலன் ஆகியோர் உரையாற்றினர். (54)

# உணவுப் பொருளுக்கு தட்டுப்பாடு இல்லையாம்

## - அரசு கூறுகிறது

(கொழும்பு)

''ஆறுமாதங்களுக்குத் தேவையான உணவுப்பொருட்கள் தற்போது கையிருப்பில் இருப்பதால், நாட்டில் எப்பகுதியிலும் உணவுப் பற்றுக்குறை ஏற்படுவதற்கு அவசியமில்லை'' என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் பதட்டநிலை ஏற்பட்டுள்ள காலத்திலும் மிளகாய், வெங்காயம் போன்றவற்றுக்கு நாட்டில் எதுவித தட்டுப்பாடும் ஏற்படவில்லைஎன கொழும்பிலிருந்து கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத் தலைமையகம் அறிவித்துள்ளது.

அரசு இவ்வாறு அறிவித்துள்ள போதிலும் வடக்கு-கிழக்கில் உணவுப் பொருட்களுக்கு தொடர்ந்தும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதும் பொருட்கள் அதிக விலையில் விற்கப்பட்டு வருவதும் தெரிந்ததே. (வி)

# சர்வதேச செஞ்சிலுவை சங்க பணிமனைகளை பாதுகாக்க 'ராடர்' ஒலி சமிக்கை

(லண்டன்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தாம் பணி புரியும் இடங்களில், தமது பணிமனை, மருத்துவக் கூடாரங்களை. அம்புலன்ஸ் வண்டிகளை போர் விமானங்கள், ஏவுகணைகள் தாக்காமல் பாதுகாக்க, 'ராடர்' சாதனங்கள் மூலம் சங்கோஜ ஒலி அனுப்பும் பாதுகாப்பு முறையை ஏற்படுத்தவுள்ளது.

இந்நடவடிக்கை அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ளது.

மாறிவரும் விஞ்ஞான மாற்றங்களுக்கமைவாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க இலச்சினையை இனங்கண்டு போர் விமானங்களும், இலக்கை நோக்கித் தாக்கும் ஏவுகணைகளும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணிமனைகளைத் தாக்காமல் பாதுகாப்பதில் தவறிவிடுவதால் புதிய மாற்றத்தைச் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் ஏற்படுத்தி உள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யுத்தம் நடைபெறும் 90 நாடுகளில் போர் நிலைகளில் உயிர் பாதுகாப்பு, மருத்துவ வசதி போன்ற மனிதாபிமான பணிகளைச் செய்துவருகின்றது.

போர் நிலைகளில் பணி புரியும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களின் பணிமனை, மருத்துவ வசதி அளிக்கும் கூடாரங்களைப் போரில் ஈடுபடும் குண்டுவீச்சு விமானங்கள், செஞ்சிலுவைச் சங்க இலச்சினைகளைக் கண்ணால் பார்த்து, அதனைத் தவிர்த்து, எதிரிகளின் நிலையைத் தாக்குவது கஷ்டமாக இருக்கும். அப்படியான சந்தர்ப்பங்களில் 5,000 அடி உயரத்தில் பறக்கும் விமானங்களுக்கு ராடர் ஒலி மூலம் இது 'சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கப் பணிமனை' எனச் செய்தி பரிமாறிப் பாதுகாப்பது புதிய மாற்றுத் திட்டம் என ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கப் பணிமனை அறிவித்துள்ளது. (ச)

# எரிபொருள் ஏமாற்றுக் கும்பல்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள்களை மலிவான விலையில் வாங்கித்தருவதாகக் கூறி அப்பாவிப்பொதுமக்களை ஏமாற்றிவரும் கும்பலொன்று தற்போது யாழ்நகரில் நடமாடிவருகின்றது.

மோட்டைப் பகுதியில் உள்ள கார்சாரதி ஒருவரிடமிருந்து மலிவான விலையில் பெற்றோல் வாங்கித்தருவதாக கூறி ஆயிரம் ரூபாவையும் அவரின் சைக்கிளையும் வாங்கிக்கொண்டு ஒருவர் தலைமறைவாகிவிட்டார்.

மேற்படி சாரதியும்மற்றொருவரும் நீண்டநேரம் பெற்றோல் வாங்கச்சென்றவரின் வருகைக்காக வழியில் காத்துநின்று விட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இச்சம்பவம்பற்றி விடுதலைப் புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (வி)

# 3 ஆலயங்களிலிருந்து மூலவிக்கிரகம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி வைத்தீஸ்வரன்கோவில், சிவன்பண்ணை வீதி நல்லதன் னிர் கிண று ஞானவைரவர் ஆலயம் உட்பட மூன்று ஆலயங்களில் மூலவிக்கிரகம் கிளப்பப்பட்டு பெறுமதிமிக்க பொருட்கள் திருடப்பட்டுள் என.

இதேவேளை நகரப்பகுதிகளில் குண்டுத் தாக்குதலினல் சேதமடைந்த கட்டிடங்களின் இடிபாடுகளிலிருந்து பொருட்களை களவாடுவதில் இரவு வேளைகளில் பலர் ஈடுபட்டிருப்பதாக அறியப்படுகிறது.

# யாழ். தேசிய சேமிப்பு வங்கி 15ம் தேதி முதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாணக் கிளை குண்டுத் தாக்குதல்களின் பின்பு இம் மாதம் 15-ம் திகதி முதல் வண்ணார்பண்ணை பிரப்பங் குளம் ஒழுங்கையில் இயங்கத் தொடங்கவுள்ளது. இம்மாதம் 15-ம் திகதி முதல் வாடிக்கையாளர்களுடன் பணக் கொடுக்கல் வாங்கல்கள் வேலைகள் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் மேற்படி இடத்தில் உள்ளக வேலைகள் நடைபெற்றுவருவது குறிப்பிடத் தக்கது. (153)

## அதிகார பரவலாக்கல்

# சட்ட திருத்தம் கொண்டுவர ஏற்பாடு

(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டில் இணக்கம் காணப்பட்டுள்ள அதிகாரபரவலாக்கல் அடிப்படை உரிமைகள் பற்றி அரசியல் சட்டம் திருத்தம் இம் மாதம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும்.

நாளை மறுதினம் கூடவுள்ள சர்வகட்சி மாநாடு அரசியல் அமைப்பு மூன்றும் அதிகார சட்ட திருத்தத்தை திருத்தத்தை திருத்துவது சம்பந்தமான இறுதிமுடிவு எடுக்கப்படும்.

வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கு தாராளமயப் படுத்தல் பற்றிய அரசியல் திருத்த சட்ட மூலம்பற்றிய இறுதிமுடிவு பதினேறும் பதினெட்டாம் திகதிகளில் கூடும் சர்வகட்சிமாநாடு முடிவு எடுக்குமென கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடிய முழுநிறைவான சர்வகட்சிமாநாடு கூட்டத்தொடரில் முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டம் ஜனதிபதி ஆர், பிரேமதாஸா தலைமையில் கூடியது. (ச)

# யாழ். கோட்டையில் மீட்கப்பட்ட சடலங்கள்

## செஞ்சிலுவைச் சங்கத்திடம் புலிகளால் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை முகாமிலிருந்து மீட்கப்பட்ட 12 இலங்கை இராணுவத்தினரின் சடலங்கள் பருத்தித்துறை இறங்குதுறையில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளினல் நேற்றுமாலை 5 மணியளவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளினல் ஒப்படைக்கப்பட்ட மேற்படி சடலங்கள் கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (வி)

## முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்

[மாங்குளம்]

மாங்குளம் முகாமுலிருந்து ஷெல் வீச்சுகள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்டு வருகின்றன.

வான்படைகளின் தாக்குதல்களும், இடையிடையே மேற்கொள்ளப்படுகிறது. மாங்குளத்திலிருந்து ஏற்கனவே மக்கள் வெளியேறியதால் பெருமளவு உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டு வருகிறது. (150)

## வாகனங்கள் அனுமதி அட்டை பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்: மாவட்டத்துக்கு அப்பால் போக்குவரத்துச் செய்யும் சகல வாகன உரிமையாளர்களும், லொறி உரிமையாளர்களும் வரிப் பற்றுச்சீட்டுடன் அனுமதி அட்டை பெற்றே தமது பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்று யாழ். பொதி சுமக்கும் வாகனச் சங்கம் அறிவித்துள்ளது.

அனுமதி அட்டையுடன், வரிப்பற்றுச்சீட்டுக்களை முறையாகப்பெற்றுக்கொள்ளாதுபயணம் மேற்கொள்ள எத்தனிக்கும் வாகனம் யாழ். மாவட்டத்திலிருந்துவெளியேற அனுமதிக்கப்படமாட்டாது என்று மேற்படி சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## சாவகச்சேரி சந்தையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனுல் சாவகச்சேரி நகரமே வெறிச்சோடியது. காயமடைந்தவர்களில் பலர் சாவகச்சேரி வைத்தியசாலையிலிருந்து மானிப்பாய் வைத்தியசாலைக்கு உடனடியாக மாற்றப்பட்டனர்.

இறந்தவர்களின் விபரம் வருமாறு: ஏ. கெங்கைவேந்தன் (40), அல்லாரை, சி. ஸ்கந்தராஜா (40), கச்சாய் வீதி, து. இலட்சுமணன் (12) சாவகச்சேரி, இ.சிறீரங்கன் (14) மட்டுவில், திருமதி செ. முத்துப்பிள்ளை (60) மீசாலை, நா. பஞ்சபாக்கியம் (மிருசுவில்), திருமதி. மகேஸ்வரி (51) மீசாலை. ஒருவரின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இவர் சுன்னுகத்தைச் சேர்ந்தவர் என அறியப்படுகிறது.

காயமடைந்தவர்களின் விபரம் வருமாறு: திருமதி ஸ்கந்தராசா (38) கச்சாய் வீதி, (இவரது கணவன் ஸ்தலத்தில் பலியாகியுள்ளார்) பொ. நந்தகோபால் (26) மீசாலை, இராமகிருஷ்ணன் சங்கத்தானை, கா. துரையப்பா (55) மீசாலை, இ. சிறீபாஸ்கரன் மட்டுவில், (இவரது தம்பி ஸ்தலத்தில் பலியாகியுள்ளார்) இராசலிங்கம் (40) மிருசுவில், திருமதி சி. சின்னமணி மந்துவில், எஸ். புஸ்பராணி (23) சாவகச்சேரி, எஸ். யோகம்மா (50) சங்கத்தானை, சி. சரஸ்வதி (45) மீசாலை, ச. முத்துவேல் (40) சாவகச்சேரி, நாகராசா (16 கல்வியங்காடு, சுப்பிரமணியம் (14) சாவகச்சேரி, கி, யோகராசா (29) சாவகச்சேரி, சு. கெங்காதரம் (78) சங்கத்தானை, எம். கனகம்மா (40) சாவகச்சேரி, இராஜா (29) அச்சுவேலி.

ஒரு குடும்பத்தில் கணவன் பலியாகி மனைவி காயமடைந்துள்ளார். இன்ஞெரு குடும்பத்தில் தம்பி பலியாகி அண்ணன் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

### கல்வியங்காட்டில் இருவர் காயம்

கல்வியங்காட்டுப் பகுதியில் எதிர்பாராத விதத்தில் நேற்று ஹெலி தாக்கியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

திருநெல்வேலிசந்தைப்பகுதியிலும் நேற்று பலாலி வீதியூடாக ஹெலி தாக்குதல் நடந்தது.

## வங்கிக் கிளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாடிக்கையாளர்களை நவீன சந்தை, பிரதான வீதிக்கிளைகள் மேலே செல்லுங்கள் என நேற்று அனுப்பிக்கொண்டிருந்தமையால் மக்கள் கியூ வரிசையில் காணப்பட்டனர்.

வங்கி நடவடிக்கைகள் ஏன் திங்கட்கிழமை நடைபெற்று செவ்வாய்க்கிழமை நடைபெறவில்லையென எமது நிருபர் அதிகாரியொருவரை வினவியர்பாது ஜெனரேட்டர் இல்லாமல் தடைப்பட்டிருந்த பணிகளை முடிக்க முடியாமல் இருப்பதாகத் தெரிவித்தார். (ச)

## ஊர்காவற்றுறையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனை, பாலாவி, ஒழுவில் மக்கள் அச்சம் காரணமாக வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இராணுவ நிலைகள் மீது விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை ஊர்காவற்றுறை தபால் நிலையத்தை மீண்டும் திறப்பதற்கு இராணுவ தரப்பில் மேற்கொண்ட முயற்சிகள் அச்சுக்குப் போகும்வரை பலன் அளிக்கவில்லையென தபாலக வட்டாரங்கள் தெரிவிக்சின்றன. (ச)

# விவசாயத்தில் ஈடுபடுமாறு புலிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உணவுற்பத்தியை அதிகரிக்கு முகமாகச் சகலரையும் விவசாயத்திலீடுபடுமாறு கோரி தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழீழ மண்ணில் விவசாய அபிவிருத்தியை ஊக்குவிக்கும் முகமாக கால்நடைகளைக் கட்டாக்காலிகளாக அவிழ்த்து விடவேண்டாமென்றும், ஆடு, மாடுபோன்றகால்நடைகளைத் தத்தமது வீடுகளில் கட்டி வளர்க்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனை மீறும் கால்நடைச் சொந்தக்காரர்கள் மீது கடும் தண்டனை வழங்கப்படுமென்றும், கட்டாக்காலிக் கால்நடைகள் பறிமுதல் செய்யப்படுமென்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (54)

## உணவுவிநியோக கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உணவு பங்கீட்டு விநியோக முன்னேற்றம் சம்பந்தமான கூட்டம் இன்று புதன் காலை 10 மணிக்கு யாழ். கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் யாழ்.அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமை நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள், உணவு கட்டுப்பாட்டு அதிகாரி, உதவி கூட்டுறவு ஆணையாளர் ஆகியோர் பங்குபற்றவிருக்கிருர்கள். (153)

# வெளிமாவட்ட ஆசிரியர்கள் இன்று வவுனியா செல்ல ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களும் வடமாகாணத்துக்கு வெளியே கடமையாற்றும் ஆசிரியர்களும் இன்று புதன் கிழமை மாலை 4 மணிக்கு வடமாநில கல்வித் திணைக்கள அலுவலகத்தில் இருந்து விசேட பஸ்கள் மூலம் வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

மேற்படி பிரயாண ஒழுங்குகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் வடபிராந்திய மினிபஸ் சங்கமும் இணைந்து சலுகைக் கட்டண அடிப்படையில் போக்குவரத்து ஒழுங்குகளை செய்துள்ளது.

இன்று காலை 10 மணிக்கு நல்லூர்ஸ்தான சி. சி. பாடசாலையிலுள்ள சங்க நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு சலுகை கட்டணத்தைச் செலுத்தி பயணத்தைச் செய்யலாமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

திருமலை மாவட்டத்துக்கு செல்ல முடியாத நிலையில் உள்ள அப்பகுதி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை கரலை 10 மணிக்கு நல்லூர் சாதனு பாடசாலையில் நடைபெறவிருக்கிறது. (153)

0 0 0

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த நிறைவேற்று அதிகாரிகளுக்கான கூட்டம் இன்று புதன் கிழமை காலை 9-00 ம்ணியளவில் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க கட்டிடத்தில் நடைபெறவிருக்கிறது. சமமநது தொழிற்சாலை முகாமையாளர் திரு. எஸ். ஞானபண்டிதன் இதனை அறிவித்துள்ளார். (153)

## வவுனியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தந்தப் பிரதேசப் பொறுப்பாளர்மூலம் பாஸ்கள் வழங்கப்படும்.

வவுனியா மாவட்டத்துக்குள் பிரயாணம் செய்யும் பொதுமக்கள் இனிமேல் எதுவித 'பாஸ்'களும் பெறவேண்டியதில்லை.

வவுனியா மாவட்டத்துக்கு சிற்றூர்அவைத் தலைவரின் சிபார்சுக் கடிதத்துடன் பிரதேசப் பொறுப்பாளரிடம் சென்று அனுமதி பெறவேண்டும்.

வெளிமாவட்டங்களில் கல்வி பயிலும் மாணவர்கள், அரச, தனியார் ஊழியர்கள் பாஸ் பெறுவதற்கு 'தமிழீழ மீட்பு நிதி' செலுத்தத்தேவையில்லை.

இவர்கள் தமது நிலையை உறுதிப்படுத்த வேண்டும். திணைக்கழ ஊழியர்கள் அடையாள அட்டை அல்லது சிற்றூர் அவைத் தலைவரின் சிபார்சுக் கடிதத்துடன் விண்ணப்பிக்கவேண்டும்.

கணவன் - மனைவி இருவரும் அரசாங்க ஊழியராக இருந்தால் தமிழீழ மீட்புநிதி வழங்க வேண்டும். தனிநபர் வழங்க வேண்டியதில்லை.

கடும் சுகயீன முற்ருேர் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்பித்து அனுமதி பெறவேண்டும்.

கிழக்கு மாகாண மக்கள் அகதிகள் புனர்வாழ்வு அட்டை அல்லது சிற்றூர் அவையின் சிபார்சுக்கடிதத்துடன் விண்ணப்பிக்கவேண்டும்.

மேற்படி அத்தாட்சிப்பத்திரங்களை முறைப்படி சமர்ப்பித்தவர்களுக்கே முத்திரைச் சத்தையில்பிரயாணத்துக்கான பயணச்சீட்டு வழங்கப்படும்

வாகன உரிமையாளர் யாவரும் நாளைமுதல், வாகன இலக்கம் பயணிகள் தொகையை குறிப்பிட்டு அனுமதி பெறவேண்டும்'

வவுனியா கண்காணிப்பு நிலையத்தில் 'பாஸ்ஸை' ஒப்படைத்தால் தான் மேற்கொண்டு பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுவர். (வி)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

உங்கள்




அபிமானத்திற்குரிய

மில்க்வைற்

தயாரிப்புகள்

மீண்டும் கிடைக்கின்றன

| | |
|---|---|
| மில்க்வைற் நீல சோப் | ரூ. 4-00 |
| அரைக் கட்டி | ரூ. 2-00 |
| மில்க்வைற் பார் சோப் | ரூ. 24-00 |
| மில்க்வைற் அரைபார் | ரூ. 12-00 |
| சுப்ப மில்க்வைற் | ரூ. 9-50 |
| சலவைப் பவுடர் 50 கிரும் | ரூ. 3-00 |
| நீமியா உரம் 1 கிலோ | ரூ. 5-00 |

தங்கள் அபிமானத்திற்கும் ஆதரவிற்கும் நன்றி

மில்க்வைற்- யாழ்ப்பாணம்